**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2022-2023-ஆம் ஆண்டு பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் –தாட்கோ மூலம் செயல்படுத்துதல் – ரூ. 20.00 கோடி – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண். 144**

**நாள் 13.07.2022**
ஆனி மாதம் 29-ஆம் நாள்,
சுபகிருது வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

1. இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண். ப.மே/அ3/ 8541/2021, நாள் 03.08.2021
2. அரசாணை (ப) எண். 63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே1(2))துறை, நாள் 29.03.2022.

*****

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் 50 சதவிகித மானியமும், 45 சதவிகித வங்கி கடனும் 5 சதவிகித பயனாளி பங்குத் தொகையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், 30.06.2021 நிலையில், தாட்கோவின் இணையதள பதிவில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு வங்கி படிவம்.III பெறப்பட்டு மானியம் கோரி நிலுவையில் உள்ள 1031 விண்ணப்பங்களுக்கு தேவைப்படும் நிதி ரூ.24.77 கோடி, வங்கிகளிடமிருந்து படிவம்.III பெற வேண்டி நிலுவையில் உள்ள 2173 விண்ணப்பங்களுக்கு தேவைப்படும் நிதி ரூ.44.23 கோடி ஆக மொத்தம் ரூ.69.00 கோடி தேவையாக உள்ளது என்றும், எனவே, பழங்குடியினர் மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், மாநில உதவி TSP/CTDP நிதியிலிருந்து பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்திட வழங்கப்படும் நிதி ரூ.10.00 கோடியிலிருந்து ரூ.30.00 கோடியாக உயர்த்தி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதன் விவரத்தினை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | திட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மானிய விபரம் | தேவைப்படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் | 1031 | 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் | 2477.28 |
| 2 | பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் வங்கி முன் மொழிவு (Form III Pending) நிலுவை | 264 | 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் | 444.00 |
| | **மொத்தம்** | 1295 | | 2921.28 |
| | நிர்வாக செலவினம் (3%) | | | 90.00 |
| | **நிகர மொத்தம்** | 1300 | | **3011.28** |

மேலும், 2021 - 2022 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு வருவாய் இனத்தில் 2225-02-796-JY-30901 என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.23,24,23,000/- மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நலத்திட்டங்கள் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்றும், எனவே, மேற்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு மொத்த தொகை ரூ.3011.28 இலட்சம் மாநில அரசு நிதியிலிருந்து தாட்கோவிற்கு பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்கு புதிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்ததன் அடிப்படையில், பழங்குடியினர்களுக்கு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.10,00,00,000/-(ரூபாய் பத்து கோடி மட்டும்) 2021-2022-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

3. அரசின் பரிசீலனைக்கு பின்னர், 2022-2023-ஆம் நிதியாண்டில், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் நில மேம்பாட்டுத் திட்டம் (LDS), தொழில் முனைவோர் திட்டம் (EDP), இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEPY), சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி மானிய திட்டம் (EA(SHG)) ஆகிய திட்டங்களை திட்ட செயலாக்க வழிக்காட்டு நெறிமுறைகளை பின்பற்றி தாட்கோ மூலம்

செயல்படுத்துவதற்கு கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் ரூ.20,00,00,000/- (ரூபாய் இருபது கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் - 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள் KC பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் - 309 உதவித் தொகை - 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.**
**"த.தொ.கு . 2225 02 796 KC 30901)"**

5. மேலே பத்தி 4-ல் துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் திட்ட மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பில் தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.20,00,00,000/- 2022-2023-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப்பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆ.தி(ம)ப.ந/வ.செ.பொது-1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். இத்தொகையினை பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தில் கீழ்க்காணும் அலுவலக பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைப்பதற்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

"K வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443 -00- உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் - BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் (தாட்கோ) 801 – வரவுகள், 02 – வட்டிபெறா வைப்பீடுகள், 802 – வழங்குதல், 02 – வட்டி பெறா வைப்பீடுகள்."

(த.தொ.கு. 8443 00 800 BY 80102) (Receipt)

(த.தொ.கு. 8443 00 800 BY 80202) (Outgo)

8. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 28960/ நிதி[ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்]/2022, நாள் 09.07.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 0641 (அறுநூற்று நாற்பத்து ஒன்று) (IFHRMS ASL No. 2022070641).

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை,
சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ,
சென்னை-600 018.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-600 009/600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 008.
நகல்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை-600 009
நிதி (ஆதி(ம) ப.ந/வ.செ.பொதுI/2/வ.ப.I.) துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் (அநமு1)துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13.7.2022
பிரிவு அலுவலர்
13/07/2022